**<u>செய்தி வெளியீடு எண்.863</u>** **<u>நாள்.15.10.2008</u>**

## <u>1990–91 வரை நிலுவையில் உள்ள விற்பனை வரி, தண்டத்தொகை மற்றும் வட்டி தள்ளுபடி தமிழக அரசு ஆணை.</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2008–2009 ஆம் ஆண்டிற்கான வணிகவரித்துறை மானியக் கோரிக்கையின்போது, 1951–52 முதல் 1990–91 வரை உள்ள காலத்திற்கான வரி நிலுவைகளை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்கான அரசாணை வெளியிடப்படும் என்று அறிவித்திருந்தார்.

1951–52 முதல் 1990–91 வரையுள்ள காலத்திற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகியவற்றின்கீழ் 98.71 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. பல ஆண்டுகளாக நடவடிக்கைகள் மேற்கொண்டும், நொடித்துப்போன வணிகர்களிடமிருந்து வரி நிலுவையை வசூல் செய்தவற்கு வாய்ப்பு இல்லாத நிலையில், அத்தகைய நலிந்த வணிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 1990–91 வரையில் உள்ள வரி, தண்டம் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தள்ளுபடி செய்ய தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. நிலுவைத் தொகைகளை தள்ளுபடி செய்யும் அதிகாரம் அந்தந்த வணிகவரி மாவட்ட உதவி ஆணையர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- வரி விதிப்பு அல்லது வரி வசூல் தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லை என்றும் –
- வரி வசூலிப்பதற்காக அசையாச் சொத்துக்கள் ஏதும் வருவாய் வரி மீட்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தவில்லை என்றும் –
- 1.4.2002க்கு முன்னர் வணிகம் நிறுத்தப்பட்டுவிட்டது என்றும்

வரிவிதிப்பு அலுவலர்கள் வழங்கும் சான்றுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி ஆணையர்கள் வரி நிலுவைகளை தள்ளுபடி செய்வார்கள்.

*************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**